1971 டிசம்பர் 13] [டாக்டர் மு. கருணாநிதி]

நிறுவனத்திற்கு, அரசின் சார்பில் பங்கு மூலதனம் செலுத்த வகை செய்யும் பொருட்டு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிதி ஒதுக்கத்துக்கு மேலாக ரூ. 80 லட்சம் செலுத்த இந்தத் துணை மதிப்பீடுகளில் மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

மு.ப. 10·30

தமிழ் நாடு கைத்தறி-நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) துணிகளை வாங்கி விற்பனை செய்யும் கொள்கையினை முனைந்து மேற்கொள்வதற்காக, குறைந்த வட்டி வீதத்தில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெருந்தொகை கடன் வாங்க வகை செய்யும் பொருட்டு, இந்த அரசு இச்சங்கத்தின் பங்கு மூலதனத்திற்கு மேற்கொண்டும், ரூ. 20 லட்சம் வழங்கியதற்கும் இத்துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பங்கு மூலதனத்திற்கும் அரசு மேற்கொண்டு வழங்கிய ரூ. 75 லட்சத்திற்கும் இத் துணை மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை மறு நிதி உதவிக் கழகம், உலக வங்கி இவற்றின் உதவி கொண்டு, பெரும் அளவில் கடன் கொடுக்கும் வேலைத் திட்டத்தினை மாநில நிலவள வங்கி மேற்கொண்டிருக்கும் இந்நிலையின் இந்த வங்கியின் நிதி வசதியினை செம்மைப்படுத்துவதற்கு இது உறுதுணையாக இருக்கும்.

இம் மாநிலத்தில் உள்ள எல்லா நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதென்ற திட்டவட்டமான நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ள தமிழ் நாடு குடிநீர் வழங்கு கழிவு நீரகற்று வாரியத்திற்கு நடைமுறை மூலதனத் தொகை ரூ. 2 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத் தொகையினையும் துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ளோம்.

தமிழ் நாடு காவல்துறை ஆணைக்குழு செய்த பரிவுரைகள் சிலவற்றை அரசு ஏற்றுக்கொண்டு, இம் மாநிலக் காவல் படையினைப் புதுமைப்படுத்தி மாற்றியமைக்க ரூ. 40·63 லட்சம் செலவு செய்வதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ள முக்கியமான செலவினங்கள் சிலவற்றையே நான் சுருங்கக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்பில் இந்த இனங்களைப் பற்றிய மேல் விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீடுகளில் சேர்த்துள்ள ஏனைய திட்டங்கள் குறித்து சிறப்பாகக் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறிக்கொண்டு, 1971-72 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

(6) 1967-68-ஆம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68 ஆம் ஆண்டில் சில மானியங்களின்கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி

நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டு விட்டதால், அம்மாதிரி ஏற்பட்ட அதிகப்படியான செலவினங்களை ஈடுசெய்வதற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மன்றத்தின் முன் வைக்க முன்வந்துள்ளேன்.

இந்த அதிகப்படியான செலவினங்களை ஆய்வு செய்த 1970-71 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர், 1967-68 ஆம் ஆண்டிற்கான அனுமதித்த மானியங்களுக்கும் சாட்டிய ஒதுக்கீடுகளுக்கும் மேல் அதிகப்படியான செலவினங்களைப்பற்றிய தங்கள் அறிக்கையில் 5-வது பத்தியில் கண்டுள்ள படி, அதிகப்படியான செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அனுப்பும்படி பரிந்துரைத்தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிவுரைக்கிணங்க, 1967-68 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில், மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 1.78.44 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு தேவை. இம் மன்றம் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(7) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1971-72 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. நா. வீராசாமி: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மின்சார வாரியத்தின் விவாதம் என்று சொன்னாலே அது ஒரு தனித்தன்மை உடையதாக இருக்கும். கடந்த பதினைந்து ஆண்டு களாக அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நோக்கியிருக்கிறேன். மின்சார வாரியத்தின் விவாதம் என்றால் பல நேரங்களிலே சூடான வாதமாக இருக்கும். சில சமயங்களிலே சுவையான நிகழ்ச்சியாக வும் இருக்கும். இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்படு கிறதா என்று கேட்கக்கூடிய அளவிற்கு, எதிர்க்கட்சிக்காரர்களோ அல்லது மற்ற எந்த உறுப்பினரும் மின்சார வாரியத்தை இடித்தும் பழித்தும் சொல்லியோ, வேறு ஏதாவது காரணம் காட்டியோ சொல்லியிருக்கிறார்களா என்றால், இதுவரையில் இல்லை. மின்சார வாரியத்தில் அப்படிப்பட்ட நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. “அங்கே தவறு நடந்திருக்கிறது, இங்கே ஊழல் நடந்துவிட்டது” என்று இன்றையதினம் எடுத்துச் சொல்வதற்கு எந்தவிதமான வழிவகையும் இல்லாதபடி, எந்த உறுப்பினரும் குறைபாடுகளை எடுத்துச்சொல்ல முன்வராதபடி மின்சார வாரியம் நல்லமுறையில் பணியாற்றிக்கொண்டுவருவதைப் பாராட்டுகிறேன்.